# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர். சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப.. (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 113/மா/2017

ஆணை எண். 69/2018

நாள் : 26/03/2018

**திருமதி உமா அமிர்தவேலு,
திரு C. இராமநாதன், – முறையீட்டு மனுதாரர்கள்
திரு C. நந்தகுமார்,சென்னை – 600 089.**

**மண்டல அலுவலர்,
11–வது மண்டலம்,
சென்னை மாநகராட்சி, – எதிர் மனுதாரர்
சென்னை – 600 087.**

சென்னை மாநகராட்சி, ராமாபுரம், குறிஞ்சிநகர், 8–வது தெருவில் வசிக்கும் திருமதி உமா அமிர்தவேலு, திரு C. இராமநாதன் மற்றும் திரு C. நந்தகுமார் ஆகியோர் அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் சார்பாக தாக்கல் செய்யப்பட்ட 10.05.2017 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் மேற்குறிப்பிட்ட நாளிலேயே பெறப்பட்டு 113/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டு. முறையீட்டு மனுதாரர்களின் முறையீடு சம்பந்தமாக மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் விசாரணையின்போது மனுதாரர்கள் அளித்த வாக்குமூலங்கள் பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சென்னை இராமாபுரம், குறிஞ்சிநகர், 8–வது குறுக்குத் தெரு முகவரியில் வசிக்கும் பொதுமக்கள் சார்பாக முறையீட்டு மனுதாரர்கள் தாக்கல் செய்த முறையீட்டு மனுவில், அப்பகுதியில் ஏற்படுத்தப்பட்ட மழைநீர் வடிகால்வாயை ஆக்கிரமித்து வீடு கட்டியதால் மழைநீர் வேகமாக செல்வதற்கு தடையாக உள்ளதென்று தெரிவித்து, இப்பிரச்சினைக்கு தீர்வு ஏற்பட வழிவகை செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரர்கள் ஆக்கிரமிப்பு செய்த நபர்கள் குறித்த எந்த விவரங்களையும் தெரிவிக்கத் தவறியுள்ளனர். எனினும், இந்நேர்வு சம்பந்தப்பட்ட கோரிக்கைக் குறித்து பொது நலனைக் கருதி மண்டல அலுவலரின் அறிக்கை பெறப்பட்டது. 06.03.2018 அன்று மண்டல அலுவலரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைக்குப்பின் தாக்கல் செய்த அறிக்கையில், மதுரவாயல் வட்டாட்சியரின் 07.03.2018 நாளிட்ட கடித எண்.436/2018/ஆ1–ஐ இணைத்து அனுப்பியுள்ளார். அக்கடிதத்தில் இராமாபுரம், குறிஞ்சி நகர், 2–வது பிரதான சாலை, புல எண். 175 /1A 22 நிலத்திற்குட்பட்ட எண். C–30, மனைக்கு பட்டா எண்.4414, திருமதி சியாமளா என்பவர் பெயரில் தாக்கலாகி உள்ளதென்றும், அதன் பரப்பளவு 0.01.30 ஏர்ஸ் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்நிலத்தில் மழைநீர் செல்லும் கால்வாய் தொடர்பான விளக்கிகள் இல்லையென்றும், மனுதாரர்களின் புகாரில் தெரிவித்துள்ளவாறு மழைநீர் வடிகால் கால்வாய் மற்றும் ஆக்கிரமிப்பு எதுவும் இல்லையென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. முறையீட்டு மனுதாரர்களிடம் 22.03.2018 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது. வட்டாட்சியரின் அறிக்கையை ஏற்றுக்கொண்டு ஆக்கிரமிப்பு இல்லை என்பதை ஒப்புக் கொண்டனர். எனினும், அப்பகுதியில் ஏற்படுத்தப்பட்ட மழைநீர் வடிகால்வாயை குறிப்பிட்டு கீழ்க்காணும் குறைபாடுகளை சுட்டிக்காட்டியுள்ளனர்:-

(1) சாலையின் மட்டத்தைவிட மழைநீர் கால்வாய் மட்டம் உயர்ந்துள்ளது ;

(2) அதனால், நீர் தேங்கும் அபாயம் ;

(3) கழிவு நீர் கால்வாய் முறைப்படி கட்டப்படாததால் ஆங்காங்கே கழிவு நீர் தேங்கி நிற்பது அதனால் சுகாதார சீர்கேடு ;

(4) கழிவு நீர் செல்லும் குழாய் துண்டிக்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்குறிப்பிட்ட சீர்கேடுகளை சரி செய்து நல்லமுறையில் மழைநீர் வடிகால்வாய் சீர்செய்யப்பட்டு நீர் தேங்காமல் செய்ய வேண்டும் என விசாரணையின்போது முறையிட்டனர்.

மழைநீர் வடிகால்வாய் அமைக்கப்பட்டுள்ள நிலப்பகுதி ஆக்கிரமிப்புக்குள்ளாகவில்லையென மனுதாரர்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர். எனினும், அவர்கள் சுட்டிக்காட்டியுள்ள குறைபாடுகளை சரி செய்து எந்தவிதத் தடங்கலுமின்றி மழைநீர் மற்றும் கழிவு நீர் வழிந்தோடுவதற்கான நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ளுமாறு 11–வது மண்டல அலுவலருக்கு அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2018– ஆம் ஆண்டு, மார்ச் திங்கள், 26–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்(பொ) 3.4.18

2.4.18

3/4/18

பெறுநர்

1. திருமதி உமா அமிர்தவேலு,
எண்.C- 28, இரண்டாவது பிரதான சாலை,
குறிஞ்சி நகர், இராமாபுரம்,
சென்னை – 600 089.

2. மண்டல அலுவலர்,
11–வது மண்டலம்,
சென்னை மாநகராட்சி,
ஆற்காடு சாலை, வளசரவாக்கம்,
சென்னை – 600 087.

3. மாநகராட்சி ஆணையர்,
சென்னை மாநகராட்சி,
ரிப்பன் கட்டிடம், சென்னை – 600 003.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்